புதுச்சேரி அரசு
தொழிலாளர் துறை
தொழிலாளர் அதிகாரி அலுவலகம் (அமலாக்கம்)
xxx

<u>செய்திக்குறிப்பு</u>

புதுச்சேரி கடைகள் மற்றும் நிறுவனச் சட்டம் 1964 மற்றும் அதன் விதிமுறைகள் 1964, புதுச்சேரி உணவகங்கள் சட்டம், 1964 மற்றும் மோட்டார் வாகன தொழிலாளர்கள் சட்டம், 1961 ஆகியவைகளின் அடிப்படையில் புதுச்சேரியில் உள்ள அனைத்து கடைகள், நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் மோட்டார் வாகன நிறுவனங்கள் ஆகியவை பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முதலாளி மட்டுமே உள்ள கடையாக இருந்தாலும் அதை தொழிலாளர் துறையில் பதிவு செய்வது என்பது கட்டாயமாகும். இருப்பினும் பல கடைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்ந்து பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவது தெரியவந்துள்ளது. இவ்வாறு பதிவு செய்யாமல் நடத்துவது விதிமுறைகள்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதன்படி புதுச்சேரியில் உள்ள பதிவு செய்யாத கடைகள், நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் மோட்டார் வாகன நிறுவனங்களை தொழிலாளர் துறையில் பதிவு செய்வதற்கு சிறப்பு முகாமினை வரும் 18/02/2013 முதல் 22/02/2013 வரை அலுவலக வேலை நேரங்களில், வர்த்தக சபை வளாகம், புதுச்சேரி என்ற இடத்தில் நடத்தப்படவுள்ளது. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் சிறப்பு முகாமிலேயே வழங்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு உடனுக்குடன் பரிசீலனை செய்யப்படும். மேலும், தேவையான பதிவுக்கட்டணம் அங்கேயே வசூலிக்கப்பட்டு பதிவு சான்றிதழ் உடனுக்குடன் வழங்கவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாமில் புதுச்சேரியில் உள்ள கடைகள், நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் மோட்டார் வாகன நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்களது கடைகள் மற்றும் நிறுவனங்களை தொழிலாளர் துறையில் பதிவு செய்துகொள்ளும்படி அறிவுறுத்தப்படுவதுடன் தொழிலாளர் சட்டங்களை உரியமுறையில் அமல்படுத்த தொழிலாளர் துறையோடு ஒத்துழைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

31.1.2013

(G. ஸ்ரீநிவாஸ்)
தொழிலாளர் ஆணையர்